

# நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

1

سُبْحٰنَكَ تُبْتُ اِلَيْكَ
وَاَنَا اَوَّلُ الْمُؤْمِنِيْنَ

ஸுப்ஹானக துப்து இலைக
வஅன அவ்வலுல் முஃமினீன்

நீ மிகவும் பரிசுத்தமானவன்; நான் உன்னிடம் மன்னிப்பு கோருகிறேன். ஈமான் கொண்டவர்களில் நான் முதன்மையானவனாக இருக்கிறேன்

அல்குர்ஆன் 7:143

## நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

**2**

رَبِّ اغْفِرْ لِي وَلِأَخِي وَأَدْخِلْنَا فِي رَحْمَتِكَ
وَأَنْتَ أَرْحَمُ الرَّاحِمِينَ

ரப்பிக்(غ)பி(ف)ர்லீ வலிஅஹீ(خ)
வஅத்ஹி(خ)ல்னா பீ(ف) ரஹ்மதிக
வஅன்(த்)த அர்ஹமுர் ராஹிமீன்

என் இறைவனே! என்னையும் என் சகோதரரையும் மன்னிப்பாயாக! உன் ரஹ்மத்தில் பிரவேசிக்கச் செய்வாயாக! ஏனெனில், நீயே கிருபையாளர்களில் எல்லாம் மிக்க கிருபையாளன்!

அல்குர்ஆன் 7:151

# நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

3-A

أَنْتَ وَلِيُّنَا فَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا وَأَنْتَ خَيْرُ الْغَافِرِينَ

وَاكْتُبْ لَنَا فِي هٰذِهِ الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ اِنَّا هُدْنَآ اِلَيْكَ

அன்த வலிய்யுனா ப(ف)க்(غ)பி(ف)ர்லனா வர்ஹம்னா வஅன்த கை(خ)ருல் கா(غ)பி(ف) ரீன்

வக்(த்)துப் லனா பீ(ف) ஹாதிஹித் துன்யா ஹஸன(த்)தவ் வபி(ف)ல் ஆஹி(خ)ர(த்)தி இன்னா ஹுத்னா இலைக

அல்குர்ஆன் 7:155,156

# நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

3-B

நீ தான் எங்களுடைய பாதுகாவலன். ஆகவே எங்களுக்கு மன்னிப்பு அளிப்பாயாக! எங்களுக்கு கிருபை செய்வாயாக! மன்னிப்பவர்களில் எல்லாம் நீ தான் மிக்க மேன்மையானவன்!

இன்னும் இவ்வுலகத்திலும், மறுமையிலும் எங்களுக்கு (அழகிய) நன்மைகளையே விதித்தருள்வாயாக! நிச்சயமாக நாங்கள் உன்னையே முன்னோக்குகிறோம்.

அல்குர்ஆன் 7:155,156

# நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

4-A

رَبِّ اشْرَحْ لِي صَدْرِي وَيَسِّرْ لِي أَمْرِي

وَاحْلُلْ عُقْدَةً مِّنْ لِّسَانِىْ ۙ

يَفْقَهُوْا قَوْلِىْ ۖ وَاجْعَلْ لِّىْ وَزِيْرًا مِّنْ اَهْلِىْ ۙ

هٰرُوْنَ اَخِى ۙ اشْدُدْ بِهٖۤ اَزْرِىْ ۙ

وَاَشْرِكْهُ فِىْۤ اَمْرِىْ ۙ كَىْ نُسَبِّحَكَ كَثِيْرًا ۙ

وَّنَذْكُرَكَ كَثِيْرًا ؕ اِنَّكَ كُنْتَ بِنَا بَصِيْرًا

அல்குர்ஆன் 20:25-35

# நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

4-B

ரப்பிஷ் ரஹ்லி ஸ(ص)த்ரி வயஸ்ஸிர்லீ அம்ரி

வஹ்லுல் உக்ததம் மில் லிஸானீ

யப்(ف)கஹு கவ்லீ

வஜ்அல்லீ வஸீ(ز)ரம் மின் அஹ்லீ

ஹாரூன அஹீ(خ) உஷ்துத் பிஹீ அஸ்(ز)ரீ

வஅஷ்ரிக்ஹு பீ(ف) அம்ரீ

கை நுஸப்பிஹக கஸீ(ث)ரா

வநத்குரக கஸீ(ث)ரா

இன்னக குன்த பினா பஸீ(ص)ரா

அல்குர்ஆன் 20:25-35

# நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

4-C

இறைவனே! எனக்காக என் நெஞ்சத்தை நீ
விரிவாக்கி தருவாயாக! என் காரியத்தை எனக்கு நீ
எளிதாக்கியும் வைப்பாயாக!

என் நாவிலுள்ள (திக்குவாய்) முடிச்சையும் அவிழ்ப்பாயாக!

என் சொல்லை அவர்கள் விளங்கிக் கொள்வதற்காக!

என் குடும்பத்திலிருந்து எனக்கு (உதவி செய்ய) ஓர்
உதவியாளரையும் ஏற்படுத்தித் தருவாயாக!

என் சகோதரர் ஹாரூனை (அவ்வாறு ஏற்படுத்தித் தருவாயாக)!

அவரைக் கொண்டு என் முதுகை வலுப்படுத்துவாயாக!

என் காரியத்தில் அவரைக் கூட்டாக்கி வைப்பாயாக!

நாங்கள் உன்னை அதிகமதிகம் (தஸ்பீஹு செய்து)
துதிப்பதற்காகவும்,

உன்னை அதிகமதிகம் நினைவு கூர்வதற்காகவும்
(இவற்றையெல்லாம் அருள்வாயாக!)

நிச்சயமாக நீ எங்களை நோக்கியவனாகவே
இருக்கிறாய் (என்றார்)

அல்குர்ஆன் 20:25-35

## நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

5

# رَبِّ إِنِّي ظَلَمْتُ نَفْسِي فَاغْفِرْ لِي

ரப்பி இன்னி ள(ظ)லம்து நப்(ف)ஸி ப(ف)க்(غ)பி(ف)ர்லி

என் இறைவா! நிச்சயமாக நான் என் ஆத்மாவுக்கே அநியாயம் செய்து விட்டேன், ஆகவே நீ என்னை மன்னிப்பாயாக!

அல்குர்ஆன் 28:16

# நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

6

رَبِّ بِمَآ اَنۡعَمۡتَ عَلَىَّ فَلَنۡ اَكُوۡنَ
ظَهِيۡرًا لِّلۡمُجۡرِمِيۡنَ

ரப்பி பிமா அன்அம்(த்)த அலய்ய ப(ف)லன் அகூன ழ(ظ)ஹீரல் லில்முஜ்ரிமீன்

என் இறைவா! என் மீது நீ அருள்புரிந்ததன் காரணமாக, நான் இனி ஒரு போதும் குற்றவாளிகளுக்கு உதவி செய்பவனாக இருக்க மாட்டேன்

அல்குர்ஆன் 28:17

# நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

7

رَبِّ نَجِّنِي مِنَ الْقَوْمِ الظَّلِمِينَ

ரப்பி நஜ்ஜினீ மினல் கவ்மிழ் ழா(ظ)லிமீன்

என் இறைவா! இந்த அக்கிரமக்கார சமூகத்தாரை விட்டும் நீ என்னைக் காப்பாற்றுவாயாக!

அல்குர்ஆன் 28:21

## நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

8

رَبِّ إِنِّي لِمَا أَنزَلْتَ إِلَيَّ مِنْ خَيْرٍ فَقِيرٌ

ரப்பி இன்னி லிமா அன்ஸ(ز)ல்த
இலைய்ய மின் கை(خ)ரின் ப(ف)கீர்

என் இறைவா! நீ எனக்கு இறக்கி
அருளும் நல்லவற்றின்பால்
நிச்சயமாக நான்
தேவையுள்ளவனாக இருக்கின்றேன்

அல்குர்ஆன் 28:24

# நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

9

إِنِّي عُذْتُ بِرَبِّي وَرَبِّكُم مِّن كُلِّ مُتَكَبِّرٍ لَّا يُؤْمِنُ
بِيَوْمِ الْحِسَابِ

இன்னீ உத்து பிரப்பீ வரப்பிகும் மின் குல்லி முதகப்பிரில் லா யுஃமினு பியவ்மில் ஹிஸாப்

கேள்வி கணக்குக் கேட்கப்படும் நாள் மீது நம்பிக்கை கொள்ளாத, பெருமையடிக்கும் எல்லோரையும் விட்டு, என்னுடைய இறைவனாகவும், உங்களுடைய இறைவனாகவும் இருப்பவனிடம் நிச்சயமாக நான் பாதுகாவல் தேடுகிறேன்.

அல்குர்ஆன் 40:27

# நபி மூஸா (அலை) அவர்கள் கேட்ட துஆக்கள்

10

وَاِنِّىۡ عُذۡتُ بِرَبِّىۡ وَرَبِّكُمۡ اَنۡ تَرۡجُمُوۡنِ

வஇன்னீ உத்து பிரப்பீ வரப்பிகும் அன்தர்ஜுமூன்

என்னை நீங்கள் கல்லெறிந்து கொல்லாதிருக்கும் பொருட்டு நான், என்னுடைய இறைவனும் உங்களுடைய இறைவனுமாகிய அவனிடமே நிச்சயமாகப் பாதுகாவல் தேடுகிறேன்.

அல்குர்ஆன் 44:20